ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2258/14 - 2021 දෙසැම්බර් මස 14 වැනි අඟහරුවාදා - 2021.12.14
*2258/14 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 2/ 1976 (iv)*

**1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டம்**

*1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் இலங்கைத் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டதும் பெருந்தோட்ட அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள்.*

**ஜயம்பதி மொல்லிகொட,**
தவிசாளர்,
இலங்கைத் தேயிலைச் சபை.

கொழும்பு 01,
2020, திசெம்பர் 31.

**ஒழுங்குவிதிகள்**

இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு திசெம்பர் 17 ஆந் திகதிய 1684/48 ஆம் இலக்க , அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபை (பெருந்தோட்டங்கள், தோட்டங்கள் மற்றும் சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி மற்றும் பேணுகை) ஒழுங்குவிதிகள் அவற்றின் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இந்த வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

EOG 12 - 0135/ 1

1A - PG 5659 — 435 (2021/12)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச. வ. பீ. 44/ 1957 (iii)*

**1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

*1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 11அ, 11ஆ மற்றும் 11இ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 49 ஆம் பிரிவின்கீழ் பெருந்தோட்ட அமைச்சரினால் ஆக்கப்பட்டவையும் இலங்கை ச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டவையுமான ஒழுங்குவிதிகள்.*

**பெருந்தோட்ட அமைச்சர்**
தவிசாளர்,
இலங்கைத் தேயிலைச் சபை.

கொழும்பு 01,
2021, மார்ச்சு 02.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் **"2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டு (தோட்டங்கள் மற்றும் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி மற்றும் பேணுகை) ஒழுங்குவிதிகள்"** என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் தேயிலைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள தோட்டங்களின் மற்றும் சிறுபற்றுநிலங்களின் உரிமையாளர்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. இரண்டாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகின்றவரும் அத்துடன் தேயிலைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளவருமான ஆள் ஒவ்வொருவரும், உற்பத்தி மற்றும் முகாமையின் தேவைப்படும் நியமம் வரை தோட்டம் ஒன்றை அல்லது சிறுபற்றுநிலம் ஒன்றை அபிவிருத்தி செய்தல் வேண்டும்; இது (இதனகத்துப்பின்னர் "ஆணையாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேயிலை ஆணையாளரால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

4. தோட்டமொன்று அல்லது சிறுபற்றுநிலம் ஒன்று உற்பத்தி மற்றும் முகாமையின் தேவைப்படும் நியமத்தில் அபிவிருத்தி செய்யப்படுகின்றதா மற்றும் பேணப்படுகின்றதா என்பதைத் தீர்மானிப்பதில் மற்றவற்றுக்கிடையில் பின்வருவனவற்றைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) அதன்கண் உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் தொகை மற்றும் தரம்;
(ஆ) அதிகளவான விளைச்சலை உறுதிப்படுத்துவதற்காக தேயிலை ஆராய்ச்சிசபையால் விதந்துரைக்கப்பட்ட அளவுகளிலும் அடிக்கடியும் போதுமான உரம் அதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது;
(இ) விதந்துரைக்கப்பட்ட இரண்டு சதவீத (2%) வருடாந்த விதிமுறையைப் பேணுவதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமுறைத் தாவரத்தின் அதிக விளைச்சல் தரும் வகைகளைக் கொண்டு மீள்நடுகையானது அவற்றின் மீது பொறுப்பேற்கப்பட்டுள்ளதா என்பது;
(ஈ) வடிகால்கள் மற்றும் மொட்டைமாடிகள் நிருமாணித்தல், வெற்றிடங்களை நிரப்புதல், பீடைகளையும் நோய்களையும் கட்டுப்படுத்துதல், களைகளை அகற்றுதல் மற்றும் காற்று வெலிட்டுகளை நாட்டுதல்;
(உ) அறுவடைசெய்தல், இலைகளைக் கையாளல் மற்றும் இலைகளை இடம்பெயர்த்தல் என்பன இலங்கை நியமம் 1315 : பாகம் 1 : 2007 பயிர்ச்செய்கைக்கான சிறந்த கமத்தொழில் செயல்முறைக்கிணங்க நிறைவேற்றப்படுகின்றதா என்பது;
(ஊ) ஊழியர்களுக்குப் பொருத்தமான வாழ்க்கை விடுதியை வழங்குதல் மற்றும் சிறந்த நிலமையில் அவற்றை பேணுவதற்கு அவசியமான திருத்தங்களை நிறைவேற்றுதல்;
(எ) அவசியமானவிடத்து வீதிகளை நிருமாணித்தல் மற்றும் சிறந்த நிலமையில் அவற்றைப் பேணுதல்;
(ஏ) தேயிலைப் பயிற்செய்கைக்குப் பொருத்தமற்றதாக இருக்கின்றதான இடப்பரப்புகளில் அங்கீகரிக்கப்பட்ட வேறு பயிர்களைப் பன்முகப்படுத்தல் மற்றும் மாற்றுப் பயிர்களுக்கான எல்லைக்கோட்டுக் காணிகளை இனங்காணல்;
(ஐ) வேலையாட்களின் நல்ல உடல்நிலமைகளையும், சுகவீனம் மற்றும் காயங்களின்போது மருத்துவ வசதிகள் வழங்கப்படுதல் உறுதிசெய்யப்பட்டிருத்தல்.

5. தோட்டங்கள் மற்றும் சிறுபற்று நிலங்களின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்கள் 4 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் பதிவுகளைப் பேணுதல் வேண்டும்.

6. அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுக வேண்டியவரான தோட்டங்கள் மற்றும் சிறுபற்றுநிலங்களின் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்கள் யாவருக்கும் காலத்துக்குக் காலம் ஆணையாளர் பணிப்புகளை வழங்கலாம்.

7. தோட்டங்கள் மற்றும் சிறுபற்று நிலங்கள் என்பன உற்பத்தி மற்றும் முகாமையின் தேவைப்படும் நியமத்தில் விருத்திசெய்யப்பட்டிருக்கவில்லை அல்லது பேணப்பட்டிருக்கவில்லை என ஆணையாளர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அவற்றின் இணங்கியொழுகாமை தொடர்பில் அத்தகைய சீராக்கங்களுக்கு பயன்கொடுத்து அல்லது அத்தகைய தேவைப்பாடுகளை நிறைவேற்றும்படி உரிமையாளர்களை எழுத்தில் பணிக்கலாம்.

8. ஆணையாளர் எவ்வாட்களுக்கு 7 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்படுகளின் நியதிகளின்படி எழுத்திலான அறிவித்தல் ஒன்றை வழங்குகின்றாரோ அவ் ஆட்கள் விடயத்திற்கு ஏற்ப உற்பத்தி மற்றும் முகாமையின் தேவைப்படும் நியமனத்துடன் இணங்கியொழுகுவதற்கு உடனடியாக அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதியின் கீழ் ஆணையாளரின் ஏதேனும் முடியின் மூலம் இடருற்ற எவரேனும் ஆள் அத்கைய முடிபினை அறிவித்து இருபத்தியெட்டு நாட்களினுள் பெருந்தோட்டம் என்னும் விடயம் எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சருக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்;

10. இவ்வொழுங்குவிதிகளில் -

"தோட்டம்", "சிறுபற்றுநிலங்கள்" மற்றும் "தேயிலை ஆணையாளர்" என்பன 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் அவற்றுக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும். "இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி சபை" என்பது 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க தேயிலை ஆராய்ச்சி சபைச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேயிலை ஆராய்ச்சி சபை எனப் பொருள்படும்.

EOG 12 - 0135/ 2

---

*ச. வ. பி. 2/ 1976 (iv)*

**1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டம்**

*1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் இலங்கைத் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டதும் பெருந்தோட்ட அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள்.*

**ஜயம்பதி மொல்லிகொட,**
தவிசாளர்,
இலங்கைத் தேயிலைச் சபை.

கொழும்பு 01,
2020, திசெம்பர் 31.

**ஒழுங்குவிதிகள்**

இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு திசெம்பர் 17 ஆந் திகதிய 1684/ 48 ஆம் இலக்க , அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபை (பச்சைத் தேயிலையின் தர நியமம்) ஒழுங்குவிதிகள் அவற்றின் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இந்த வர்த்தமானியின் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

EOG 12 - 0135/ 3

*ச. வ. பீ. 44/ 1957 (iii)*

**1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

*1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 11அ, 11ஆ மற்றும் 11இ மற்றும் 17 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 49 ஆம் பிரிவின்கீழ் பெருந்தோட்ட அமைச்சரினால் ஆக்கப்பட்டவையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டவையுமான ஒழுங்குவிதிகள்.*

**பெருந்தோட்ட அமைச்சர்**
தவிசாளர்,
இலங்கைத் தேயிலைச் சபை.

*கொழும்பு 01,*
*2021, மார்ச்சு 02.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் **"2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டு (பச்சைத் தேயிலையின் தர நியமம்) ஒழுங்குவிதிகள்"** என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான மூலப்பொருளாக உரிமம்பெற்ற பச்சைத் தேயிலை வியாபாரிகள் அனைவருக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

3. தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்திக்காக தேயிலைத் தொழிற்சாலை ஒன்றை தொழிற்படுத்துகின்ற அத்தகைய உற்பத்தியாளர் ஒவ்வொருவரும்:-

   (அ) (இதனகத்துப் பின்னர் ''ஆணையாளர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேயிலை உற்பத்தியில் பயன்படுத்துவதற்கான தேயிலை ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்ட தர நியமத்துடன் ஒத்திசைகின்ற பச்சைத் தேயிலையின் ஆகக் குறைந்தது அறுபது சதவீதத்தினை (60%) பெறுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

   (ஆ) உற்பத்திக்காக அவ்வாறு பெறப்பட்ட பச்சைத் தேயிலை, அத்தகைய பச்சைத் தேயிலையின் வழங்குனர்களின் அறுவடைக்குப் பிந்திய தொழிற்பாடுகள் காரணமாக சேதமடையவில்லை என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4. பச்சைத் தேயிலையின் அத்தகைய உரிமம்பெற்ற வியாபாரிகள் ஒவ்வொருவரும் -

   (அ) தேயிலை உற்பத்திக்காக பயன்படுத்தப்படுவதற்காக ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்ட தர நியமங்களுடன் ஒத்திசைகின்ற பச்சைத் தேயிலையின் ஆகக்குறைந்தது அறுபது சதவீதத்தினை (60%) வழங்குவதற்கு முயற்சித்தல் வேண்டும்; அத்துடன்

   (ஆ) தொழிற்சாலைக்கான பச்சைத் தேயிலையினை கையாளுதல் மற்றும் இடம்பெயர்த்தல் அப்பச்சைத் தேயிலைக்கான சேதமின்றி செய்யப்படுகின்றதை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்.

5. அத்தகைய உற்பத்தியாளர் ஒவ்வொருவரும் உரிமம் பெற்ற வியாபாரிகள் ஊடாக ஆகக்குறைந்தது அறுபது சதவீத (60%) தர நியமம் பச்சைத் தேயிலையினைப் பெறுவதற்கு ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும் என்பதுடன், சேதமடையாத பச்சைத் தேயிலையினை தொடர்ச்சியாக வழங்குதலையும் உறுதிப்படுத்துவதற்கு முறையான பொறிமுறைகளை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

6. தயாரிக்கப்பட்ட தேயிலையின் உற்பத்திக்காக தேயிலைத் தொழிற்சாலை ஒன்றைத் தொழிற்படுத்துகின்ற அத்தகைய உற்பத்தியாளர் உவ்வொருவரும் அத்துடன் அத்தகைய தொழிற்சாலைக்கு பச்சைத் தேயிலையினை வழங்குகின்ற உரிமம்பெற்ற வியாபாரி ஒவ்வொருவரும் தொழிற்சாலைக்கான பண்ணைவாயிலிருந்து பச்சைத் தெயிலையினை இடம்பெயர்ப்பதற்கு ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கலன்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

7. பதிவுசெய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்களினாலும், உரிமம்பெற்ற பச்சைத் தேயிலை வியாபாரிகளினாலும் சொந்தமாக்கப்பட்டு முகாமைசெய்யப்படும் தேயிலைத் தொழிற்சாலைகள் யாவும், காலத்திற்குக்காலம் ஆணையாளரினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் என்பதுடன், ஆணையாளரினால் தேவைப்படுத்தக்கூடியவாறாக அத்தகை பதிவேடுகளைப் பேணுதலும் வேண்டும்.

8. இவ்வொழுங்குவிதியின்கீழ் ஆணையாளரின் ஏதேனும் முடிபு மூலம் இன்னலுற்ற எவரேனும் ஆள் அத்தகைய முடிபு அறிவிக்கப்பட்டு இருபத்தியெட்டு நாட்களினுள் எவ்வமைச்சருக்கு பெருந்தோட்ட என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டதோ அவ்வமைச்சருக்கு எழுத்தில் மேன்முறையீடு வெய்யலாம்;

9. இவ்வொழுங்குவிதிகளில் "ஆணையாளர்", "பச்சைத் தேயிலை", "தயாரிக்கப்பட்ட தேயிலை", "உற்பத்தியாளர்", "உரிமையாளர்" மற்றும் "தேயிலைத் தொழிற்சாலை" மற்றும் "உரிமம்பெற்ற வியாபாரி" என்பது 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் அவற்றுக்கு குறித்தளிக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

EOG 12 - 0135/ 4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.